செ.வெ.எண்: 270 நாள்: 11.05.2011

**கலை பண்பாட்டுத் துறையின் ஆணையர் அவர்கள் அளித்துள்ள செய்தி குறிப்பு**

ஓவியக்கலையில் ஆர்வமுள்ளவர்கள் அரசு கவின் கலைக் கல்லூரியில் சுடுமண் ஆலையக வடிவமைப்பு, துகிலியியல் ஆலையக வடிவமைப்பு, காட்சி தொடர்பு வடிவமைப்பு , வண்ணம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய நான்காண்டு பட்டப்படிப்புகளை சென்னையிலும், கும்பகோணத்தில் வண்ணம், காட்சி தொடர்பு வடிமைப்பு, சிற்பம் போன்ற பிரிவுகளை பயிலலாம். மேலும் முதுகலை பட்டப்படிப்பு பயில விரும்புபவர்கள் சுடுமண் வடிவமைப்பு, துகிலியியல் ஆலையக வடிவமைப்பு, காட்சி தொடர்பு வடிவமைப்பு, வண்ணம், சிற்பம் போன்ற பிரிவுகளை இரண்டாண்டுகளில் பயிலலாம். கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரியில் வண்ணம், சிற்பம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலை பட்டப்படிப்பாக பயிலலாம். மேற்காண் கல்லூரிகளில் பட்டப்படிப்புகளில் சேருவதற்கு +2 தேர்ச்சியுடன் ஓவியக்கலையில் ஆர்வமுள்ளவர்களும், முதுகலை பட்டப்படிப்பில் சேருவதற்கு அக்கல்லூரியில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

ஓவியம் / சிற்பக்கலையில் ஆர்வமுள்ள மாணாக்கர்கள் மாமல்லபுரம், கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியில் பி.டெக்., மரபு கட்டடக்கலை, பி.எப்.எ., மரபு சிற்பக்கலை, பி.எப்.எ., மரபு ஓவியம் / வண்ணம் ஆகிய பிரிவுகளில் சேர்ந்து பி.டெக்., பயிலுவதற்கு +2 (கணக்குப்பிரிவு) தேர்ச்சியும், பி.எப்.எ., பிரிவிற்கு +2 தேர்ச்சி அல்லது பட்டயம் பயின்ற மாணாக்கர்கள் குறிப்பாக ஓவியக்கலை மற்றும் சிற்பக்கலையில் ஆர்வமுள்ள மாணாக்கர்களாக இருத்தல் வேண்டும்.

மேற்காண் கல்லூரிகளில் பயின்று தேர்ச்சி பெற்ற மாணாக்கர்கள் சுயமாக இப்பிரிவில் தொழில் செய்யலாம். மேலும் அத்துறைகளில் கலை வல்லுநர்களாகவும், உலகம் முழுவதும் தனித்துவம் பெற்று சிறந்து விளங்கும் வாய்ப்புள்ளது. மேலும் மத்திய / மாநில அரசுகளில் பணிபுரியும் வாய்ப்புகள் கிடைக்கபெறும். ‘‘**கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள். கவலை உனக்கில்லை ஒத்துக்கொள். எத்தொழில் எதுவும் தெரியாமல் இருந்திடல் உனக்கு சரியாமோ**’’ என்ற கவிமணி தேசிய விநாயகம் பாடல் வரிகளுக்கேற்ப இத்துறையில் புகழ்பெற்று வாழ்க்கையில் கவலையின்றி இருந்திட வாய்ப்புண்டு.

**ஆணையர்,**
**கலை பண்பாட்டு இயக்ககம்,**
**சென்னை-600 028.**

D:\DAC 2\2a3\Mamallpuram\Mamallapuram courses.docx

11/5/11

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.